**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி.**

OS 94/2021

06.02.2026.

DW - 1

**பி.வா.சா.1ரவி, த/பெ.தங்கவேல் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் - படிக்கவில்லை. தாவா சொத்திற்கு அருகில் எனக்கு நிலம் உள்ளது என்றால் - சரிதான். எனக்கு தமிழ் ஓரளவு படிக்க தெரியும். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில், சொத்து சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் - சாட்சி ஆவணத்தை பார்த்து படித்துவிட்டு இல்லை என்கிறார். ஆனால், நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூலத்திலும் எதிர் வழக்குரையிலும் சொத்தின் அனுபவம் என்னிடம் ஒப்படைத்ததாக நான் தவறாக குறிப்பிட்டுள்ளனே் என்றால் - சரியல்ல. நான் சொல்வதுபோன்று 2003 ல் போடப்பட்டதாக சொல்லப்படும் ஒப்பந்த பத்திரத்தில் சுவாதீனத்தை ஒப்படைத்ததாக வாசகம் இல்லை என்றாலும் சுவாதீனம் என்னிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றாலும் - சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து சுப்பரமணியன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது அவருடைய கையெழுத்து கிடையாது என்றாலும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றாலும் - சரியல்ல. சொத்து விவரத்தில் புல எண்.358 என்பது திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல. புல எண்.358 அருகிலேயே 358/1 என்று போடப்பட்டு அதனை அடித்துவிட்டு தான் 358 என்று போடப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல. அதே சொத்து விவரத்தில் ஐம்பத்தெட்டு என்பது திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல. 2 ஏக்கர் 50 செண்ட் என்று போடப்பட்டு 50 என்பது திருத்தப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல. சாட்சிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் இரண்டு கையெழுத்து மட்டும் தான் போடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். சொத்து விவரத்திற்கு கீழ் கையொப்பம் இட்டுள்ள சுப்பரமணியன் என்ற கையெழுத்துக்கு கீழ் ஜி. காத்தையன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். அந்த காத்தையனும் எழுதிக்கொடுத்தாரா என்றால் - இல்லை. அவர் சாட்சி கையொப்பம் போட்டார். சொத்து விவரத்தில் போனவினால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது குறித்து அதனை வரைவு செய்த சம்பத் என்பவர் அந்த திருத்தத்திற்கு அருகில் மேலெழுத்து செய்துள்ளாரா என்றால் - இல்லை. எழுதிக்கொண்டு வலங்கைமான் சென்று சம்பத்திடம் கையெழுத்து வாங்கினோமா என்றால் - இல்லை. அவரே தான் தயார் செய்தார். 2003 ல் வாதியின் கணவர் சுப்ரமணியன், எழுதிக்கொடுத்ததாக சொல்வது பொய் என்று சொல்வதும் அதில் உள்ள கையெழுத்து அவருடைய அல்ல என்றாலும் - சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை இந்த வழக்கிற்காக தயார் செய்துள்ளேன் என்றால் - சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போடப்பட்டுள்ளதற்கு அருகில் அப்பா பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்படவில்லை என்றால் - சரிதான். ஆழ்குழாய் கிணறு (போர்செட்) போடுவதற்காக தான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை என்னிடம் வாங்கினார்கள் என்ற விவரத்தினை வழக்குரையிலோ நிருபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் - இல்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணத்திலும் போர்செட் போடுவதற்காக தான் வாதியின் கணவர் சுப்ரமணியன் கடன் வாங்கினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் - இல்லை. **(வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).**

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,

சார்பு நீதிபதி. மன்னார்குடி.